விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் - 51 | வைகாசி 1999 | பக்கங்கள் 12 | ஒளி 36

யாழ், பல்கலைக்கழக கடல் வள அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுசங்கசமாசம்

## கடற்றொழிலாளர் கல்வி வாழ்க்கைத்தரம் உயர

## 'டிப்ளோமா' பயிற்சிநெறி ஆரம்பிக்க நடவடிக்கை

கடற்றொழிலாளர்களின் கல்வி அறிவை மேம்படுத்தவும், அவர்களது அனுபவம், ஆற்றல்களைவளர்த்தெடுக்கவும், யாழ். பல்கலைக்கழகத்தின்கடல் வள அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு கடற்தொழில் ''டிப்ளோமா'' பயிற்சி நெறியினை ஆரம்பிப்பதற்கு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சமாசத் தலைவர் திரு.சி. தவரத்தினம் ஐக்கிய தீபத்திற்கு தெரிவித்தார்.

கடந்த பத்து வருடங்களாக கடற்றொழிலாளர்கள் அனுபவித்துவரும் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும், அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் பல நடவடிக்கைகளை சமாசம் மேற்கொண்டுவருவதாகவும், தெரிவித்த சமாசத்தலைவர் திரு. சி. தவரத்தினம் மேலும் தெரிவித்ததாவது :

கடற்றொழிலாளர் மீளக்குடியமர்ந்தபின், அவர்களது தொழிலுக்குத் தேவையான வலைகள், கயிறுகள் போன்ற உபகரணங்களை எடுத்து வழங்குவதில் சமாசம் ஈடுபட்டு வந்தது. இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை மட்டும் பெற்றுவந்த தொழிலாளர்களுக்கு கடல் வலயச் சட்டத்தினால் ஏற்பட்ட தொழில் பாதிப்பிற்கான நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை. கடற்றொழிலுக்குரிய உபகரணங்கள்வழங்கப்பட்ட பின் சட்டம்அனுமதித்துள்ள கடற்பிரதேசத்தில் ஓரளவுக்கு மீன்பிடித்தொழிலை செய்யமுடிந்தது.

யு. என். எச். சி. ஆர், மற்றும் அகில உலக கெயர் நிறுவனம்போன்ற வெளிநாட்டு அரசசார்பற்றநிறுவனங்கள் சிறு அளவிலான உதவிகளை இத்தொழிலாளர்களுக்கு வழங்கிவந்தன. சுழற்சிமுறையில்கடன் வழங்கும் உதவிகளை யூ என். எச். சி ஆர்நிறுவனம் வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய இடங்களில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 30%மான அங்கத்தவர்களுக்கு வழங்கிவருகிறது.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களினதும், பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கடல் வள அபிவிருத்தி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் கே சித்திரவடிவேல் அவர்களினதும் உதவியுடன் க. பொ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களுக்கு கடற்தொழில் டிப்ளோமா பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

தற்போதுள்ளசூழ்நிலையில் கடற்றொழில் திணைக்களத்தில் நிலவும ஆளணி பற்றாக்குறையினால் கடற்றொழில் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. அதுமட்டுமல்லாமல் கடற்றொழில்துறைசார்ந்த அனுபவமும், ஆற்றலும் உள்ளவர்களை உருவாக்கவும். அவர்கள் மூலம் இத்துறையை மேம்படுத்தி துறை சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், கடற்றொழிலுக்கு ஏற்ற புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தவும், இத்தொழிலில் ஈடுபாடு . அறிவு, மனப்பான்மை திறன்கள், நடத்தைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவும், ஒரு வருட டிப்ளோமா பயிற்சி உதவியாக இருக்கும்.

### உள்ளே...


☆ கூட்டுறவு இயக்கத்தில் தலைமைத்துவம்
☆ வாய்மைத்தினம்
☆ ஆடல்அரங்கின் பன்முக வளர்ச்சி
☆ கூடுதல் இரசாயனப்பசளைப் பிரயோகத்தினால் சூழலில்ஏற்படும் பாதகமான விளைவுகள்
☆ செயல் திட்ட அறிக்கை
☆ காசநோய்
☆ கடிக்காதே சிறு .
☆ அறிவுச் சுடர்
☆ அமரர் பண்டிதர் க. யோ. ஆசிநாதன் நினைவாக...


★ கூட்டுறவே நாட்டுயர்வு ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு இயக்கத்தில் தலைமைத்துவம்

எந்த ஓர் சமூக இயக்கத்தின் வெற்றியும் திறமையான தலைமைத்துவத்திலும் பயனுள்ள ஒழுங்கமைப்பிலுமே தங்கியுள்ளது சமூக இயக்கங்கள் நிலைத்து வாழ வேண்டுமானால் அல்லது பல சாதனைகளைப் படைக்க வேண்டுமானால் திறமையான தலைமைத்துவம் இன்றியமையாதது. அதிகமான சமூக இயக்கங்களின் தோல்விகளுக்குச் சரியான தலைமைத்துவமும் பயனுள்ள, ஒழுங்கமைப்பும் இன்மையே காரணமாகும். கூட்டுறவு ஓர் சமூக இயக்கம். மனித குலத்தின் அமைதியான சுபீட்சம் நிறைந்த வாழ்க்கைக்குத் தடையாக இருக்கும் சகல தடைகளையும் நீக்கி ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவியுடன் அறவழி சார்ந்த நடவடிக்கைகளால் பொருளாதார சமூக கலாச்சாரத் துறைகளில் முன்னேற்றமடைந்த ஜனநாயக ரீதியான சமுதாயத்தினை உருவாக்குவதே கூட்டுறவின் உயரிய நோக்கமாகும். இந் நோக்கத்தினை எய்த வேண்டுமானால் திறமையான தலைமைத்துவம் கூட்டுறவுக்கு இன்றியமையாதது.

**சிறந்த கூட்டுறவுத் தலைவர்களை எவ்வாறு உருவாக்கலாம் ?**

தலைவர்கள் பிறப்பதில்லை. அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்: பிறப்புரிமை ரீதியாகவே தலைவர்கள் தோற்றம் பெறுகிறார்கள் என்ற கருத்து தற்போது ஏற்படுவதில்லை. பெரும்பாலும் வாழும் சூழ்நிலைகளே தலைவர்களை உருவாக்கிறது என்ற கருத்து இன்று பலராலும் ஏற்கப்படுகிறது தலைமைத்துவம் ஓர் இயங்கும் செய்முறையாகவுள்ளது. அத்துடன் இலக்கினை மையமாக வைத்து அதனை அடைவதற்காக குழு உறுப்பினர்களை வழி நடத்திச் செல்லும் ஆற்றலைக் கொண்டது வழி நடத்திச் செல்லும் ஆற்றலை ஒருவரிடம் வளர்ப்பதனூடாக அவரை சிறந்த தலைவராக்க முடியும். வழி நடத்திச் செல்லும் ஆற்றல் என்பது ஓர் அமைப்பு அல்லது குழுவினுடைய இலக்கினை அடைவதற்காக அதன் அங்கத்துவர்களுடைய நடத்தையில் செல்வாக்குச் செலுத்தி அதனை மாற்றக்கூடிய வல்லமையைக் குறிக்கும். இந்த வல்லமையை ஒருவர் நன்றாக வளர்த்துக்கொள்ளமுடியும்? அதற்குக் கடுமையான அர்ப்பணிப்பும் பயிற்சியும் இன்றியமையாதது பொதுவாக வல்லமை என்பதனை சமூக உளவியலாளர்கள் ஐந்தாக பாகுபடுத்துகிறார்கள்.

1) தண்டனை அளிக்கக்கூடிய வல்லமை
2) நிபுணத்துவ வல்லமை
3) சட்ட ரீதியான வல்லமை
4) வெகுமதியளிக்கக்கூடிய வல்லமை
5) கௌரவ வல்லமை.

தொழிலாளர் வர்க்கத்துக்குரிய ஓர் இயக்கமாகவே கூட்டுறவு இயக்கம் தோற்றம் பெற்றது தொழிலாளர்கள், முதலாளித்துவ சுரண்டல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்து தமக்கென ஓர் வளம் மிக்க வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காகவே அவர்கள் கூட்டுறவை நாடினர். இன்று கூட்டுறவு இயக்கம் உலகின் பல நாடுகளில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. தொழிலாள வர்க்கத்தினரும் தத்தமது சமூக பொருளாதார தேவை கருதி கூட்டுறவுச் சங்கங்களை நிறுவியுள்ளார்கள். எனவே அவர்கள் அதனூடாக தமது வாழ்க்கையை மேம்படுத்திப் பல சாதனைகளைப் படைக்க வேண்டுமானால் சிறந்த தலைமைத்துவமும் உறுதியான ஒழுங்கமைப்பும் இன்றியமையாதவையாகும்


**து. பிரபாகரன்**
உதவிப் பதிவாளர்
கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்


சிறந்த கூட்டுறவுத் தலைமைத்துவம் திறமையான கூட்டுறவுக் கல்விப் பயிற்சியளிப்பு நடவடிக்கைகளுக்கூடாகவே வளர்க்கப்படலாம். ஏனெனில் கூட்டுறவு இயக்க உயர்ந்த கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஓர் ஜனநாயக இயக்கமாக உள்ளது. ஜனநாயகம் நீடித்து நிலைபெற்றிருக்க வேண்டுமானால் கல்வி மிகவும் வேண்டியதாகும். கூட்டுறவு இயக்கத் தன்மையைப் பெற்றுக் கொண்டது அதற்கென வகுக்கப்பட்ட கொள்கைகளின் விளைவாகவே ஆகும். ஆகவே அக்கொள்கைகள் பற்றிய தெளிவும் அதனை நடைமுறைப்படுத்துகின்ற வல்லமையும் கூட்டுறவாளர்களுக்கு மிகவும் வேண்டியதாகும்; எனவே கூட்டுறவாளர்கள் கூட்டுறவுக் கொள்கைகளில் பரிட்சயமுடையவர்களாக்கப்பட்டால் தான் அவர்கள் சிறந்த கூட்டுறவுத் தலைவர்களாக வரமுடியும். கூட்டுறவின் உயரிய இலட்சியத்தினை அடைவதற்கு வேண்டிய வல்லமையினையும், ஆற்றல்களையும் கூட்டுறவுக் கொள்கைகளை சிறந்த முறையில் பயிற்றுவிப்பதனூடாகவே விருத்தி செய்ய முடியும். சிறந்த கூட்டுறவுத் தலைமைத்துவம் என்பது கூட்டுறவுக் கொள்கைகளின் வழி கூட்டுறவு அமைப்பினை வழிநடத்தி கூட்டுறவின் உயரிய இலக்கினை அடைதலாகும்.

> தலைவர்கள் பிறப்பதில்லை; அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். அதாவது அவர்கள் வாழும் சூழ்நிலைகளே அவர்களை உருவாக்குகிறது. என்ற கருத்தை வலியுறுத்தி திறமையான கூட்டுறவுத் தலைமைத்துவத்துவத்திற்கு சிறந்த கூட்டுறவு கல்வி பயிற்சி அளிப்பு அவசியமென யாழ் கூட்டுறவுக்கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளரும் தற்போது கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் உதவிப்பதிவாளராகக் கடமையாற்றும் திரு. து. பிரபாகரன் அவர்கள் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

1966ம் ஆண்டில் சர்வதேசக் கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகளில் கூட்டுறவின் தலைமைத்துவமும், ஒழுங்கமைப்பும் ஜனநாயக ரீதியில் அமைந்தது என்று தெளிவாக காட்டப்பட்டுள்ளது. இந்தவகையில் கூட்டுறவு ஜனநாயக மரபுகளையும் கோட்பாடுகளையும் தன்னுள் அடக்கியுள்ளது. அங்கத்தவர்கள் ஏற்றுக்கொண்ட முறையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது நியமிக்கப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் அலுவல்களை நிர்வகிக்க வேண்டும். சங்கத்தின் தீர்மானங்களை எடுக்கும் உயர் அதிகாரம் கொண்ட எல்லா அங்கத்தவர்களும் கலந்து கொள்ளும் பொதுச் சபைக்கே இருக்கும். அங்கத்தவர்கள் ஜனநாயக முறையில் எடுத்த தீர்மானங்களுக்கு அமைவாகவே முகாமை சங்கத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றும். ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்குரிமையே உண்டு.

பொதுவாக ஓர் ஜனநாயக ரீதியான தலைமையில் இரு தலைமைத்துவம் காணப்படும். அதனை பெயரளவில் தலைமைத்துவம், உண்மைத் தலைமைத்துவம் என இரண்டாக

(12 ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்மைத் தினம்

இன்று சர்வதேச ரீதியாக, ஆசிரியர்தினம், மகளிர்தினம், சுற்றாடல் தினம், மது எதிர்ப்புத் தினம் தியாகிகள் தினம் என்று பல்வேறு தினங்கள் கொண்டாடப் படுகிறது, ஆனால் அமெரிக்காவில் விஸ்கான்ஸின் மாநிலத்தில்உள்ள மாண்டெல்லோ என்ற இடத்தில் 1854 ம்ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதியை ''வாய்மைத்தினமாகக்'' கொண்டாடுகிறார்கள்

இரண்டுமீற்றர் சலவைக்கல்லினாலான கல்லறைக்குள் உறங்கும் 11 வயதுச்சிறுவனின்பெயர் இம்மானுவல் இவனது பெற்றோர்கள் 1845 ம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவில் விஸ்கான்ஸின் மாநிலத்தில் உள்ள மாண்டெல்லோ என்ற இடத்தில் வந்து குடியேறினார்கள்;

இம்மானுவல்லின் நான்காவது வயதில் தாயார் இறந்து போனார். அடுத்த ஆண்டிலே தந்தையாரும் இறந்து போனார். அனாதரவாக விடப்பட்ட இம்மானுவலை சாமுவேல் நார்ட்டன் என்பவர் எடுத்து வளர்த்து வந்தார். அப்போது தான் அந்தப்பயங்கரம் நடைபெற்றது.

ஒருநாள் மாலை வேளையில் இம்மானுவேல் குடியிருந்த தெருக்கோடியில் கடை வைத்திருந்த கடைக்காரன் இம்மானுவல்லின் சிறிய தந்தையை இரும்புக் கடப்பியினால் அடித்துக் கொன்றுவிட்டான் இப்பயங்கர சம்பவத்தை இம்மானுவல் பார்த்துவிட்டான்.

நீதிமன்றத்தில் இக்கொலை வழக்கு நடந்தபோது, கொலைகாரக் கடைக்காரன் இம்மானுவல்லின் வளர்ப்புத் தந்தையான சாமுவேல் நார்ட்டனிடம் இம்மானுவலைப் பொய்சாட்சியம் சொல்லும்படியாகவும் இதற்கு ஏராளமான பணம் தருவதாகவும் கூறினான்.

பணத்திற்கு ஆசைப்பட்ட வளர்புத்தந்தை சாமுவேல் நார்ட்டன் பொய்சாட்சியம் சொல்லும்படி இம்மானுவல்லை வற்புறுத்தினார். அப்போது இம்மானுவல் ''அப்பா நான் பொய் சொல்லமாட்டேன்'' என்று பலமாக மறுக்கவே அருகில் இருந்த கட்டையால் பையனை அடிக்க, அடி மண்டையில் பலமாகப்பட்டதினால் இம்மானுவல் இறந்து விட்டான்;

இக் கொலைக்காக சாமுவேல் நார்ட்டனும், அவரதுமனைவியும் தண்டிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார்கள்.

'ஒரு பொய் சொல்லமாட்டேன்' என்பதற்காக உயிரை இழந்த இம்மானுவலைப்பாராட்டி அவனது உண்மைத் தன்மையை மறவாமல் மாண்டெல்லோ நகரமக்கள் தங்கள் சொந்தச் செலவில் 1954 - ம் ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதி சிவப்பு சலவைக்கல் நினைவாலயத்தை எழுப்பினார்கள். நூறு ஆண்டுகள் கழித்து இந்த நினைவாலயம் கட்டப்பட்டாலும் இன்றும் நினைவாலயத்தில் ஊர் மக்கள் ஒன்று கூடி மே இரண்டாம் திகதியை ''வாய்மைத் தினமாக''க் கொண்டாடுகிறார்கள்.

ஆதாரம் - ஹிந்து

# ஆடல் அரங்கின் பன்முக வளர்ச்சி

யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா எழுதிய 'ஆடல்அரங்கின்பன்முகவளர்ச்சி' என்னும்கட்டுரையின்இறுதிப்பகுதி இங்கு பிரசுரமாகியுள்ளது.

வங்காளத்திலும் ஒறிசாவிலும் காணப்படும் 'யாத்ரா' ஆடல் வடிவங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஆடல் உள்ளடக்கத்திலும், வடிவிலும், மாறுபாடுகள் கொண்ட இயல்புகளைக் காண முடியும் ராம யாத்ரா,துர்கா யாத்ரா, சிவயாத்ரா என்றவாறு பிரிவுகள் யாத்ரா ஆடலியலில் அமைந்துள்ள உலகியற்பாங்கான நடப்பியல்,விகாரங்கள், உணர்வுகள், வன்செயல் வெளிப்பாடு முதலியவற்றைத் தமது வாழ்வியல் அனுபவங்களை அடியொற்றித் தெய்விகக் கதைகளைப் புலப்படுத்தும் ஆடற் கோலங்களும் காணப்படுகின்றன.

ஆடலின் பன்முகக் கோலங்களை விளங்கிக் கொள்வதற்கு சாஸ்திரிய ஆடல்களின் வேர்களாக அமையும் நாட்டார் ஆடல் மரபுகளை விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது புவியியற் சூழல், சமூகச்சூழல் முதலியவை ஆடல் அசைவுகளை உருவாக்கியும் செம்மைப்படுத்தியும் வந்துள்ளன. ஆடல் அசைவுக் கோலங்கள் வாழ்க்கை அமைப்பின் குறிகாட்டிகளாகவுள்ளன. அதாவது ஆடல் வாழ்க்கை என்பது சமூக வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாது விளங்குகின்றது.

தொழில் முறைகளின் பெருக்கம் அசைவுகளின் பெருக்கத்தை ஏற்படுத்தியது. உணவு சேகரித்தல், வேட்டையாடல், மந்தை மேய்த்தல், பயிர் செய்தல்,என்றவாறமைந்த தொழில் முறைகள் மேலும் சிக்கலடைந்து வளர்ச்சியடையத் தொடங்க, ஆடல் அசைவுகளும் பன்முகமாகியும் சிக்கலடைந்தும் வளர்ச்சியடையத் தொடங்கின. ஆடல் அலகுகளிடையே காணப்பட்ட பொதுத்தன்மைகளை இணைத்துக் கோவைப்படுத்தி ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் பேரரசுகளின் விரிவாக்கத்தோடு ஏற்படத் தொடங்கின.

## ஆடலரங்கு

ஒவ்வொரு மனிதருடைய உணர்வுகளும் வேறுபடும் பொழுது அசைவுகளும் வேறுபடுகின்றன. இந்நிலையில் பரந்த பொதுமைகளை உள்ளடக்கிய ''பெரும்மரபும்'' நுண்ணிய வேறுபாடுகளை உள்ளடக்கிய ''சிறுமரபுகளும்'' சமாந்தரமாக வளர்ச்சியடையத் தொடங்கின.

ஆடல்களின் பன்முகப்பாடுகள் இரு நிலைகளிலே ஏற்படுகின்றன அவை:

(1) தளப்பன்முகப்பாடு

(2) தளஉள்ளமையும்பன்முகப்பாடு

தளப்பன்முகப் பாடுஎன்பதுபாரம்பரிய இந்திய மரபில் வர்ணப்பன்முகப்பாடு எனப்பட்டது; தள உள்ளமையும் பன்முகப்பாடு என்பது ஒரே வர்ணத்துக்கிடையே காணப்படும் பல்வகை இயல்புகளைச் சுட்டிக் காட்டுகின்றது, தள உள்ளமையும் பன்முகப்பாட்டு ஆடல்களுக்கிடையே ஒற்றுமைகளைக் காணுதல் எளிதாகும்.

ஆடல் தொடர்பான சமஸ்கிருத நூல்கள் சமூக மேல்தளத்தின் உள்ளமைந்த பன்முகப்பாடுகளுக்கிடையே ஒற்றுமைகளைக் காண முயன்றன. இதனால் அடித்தள மக்களின் பன்முகமான ஆடற்கோலங்கள் ''பெரும் மரபு'' ஆக்கங்களிலே புறக்கணிக்கப்பட்டன. பெரும் மரபுகளையே அவர்கள் ''தொல்சீர்மரபுகள்'' என்றும் அழைத்தனர். இந்திய விடுதலை இயக்கக்கலை முயற்சிகள் பெரும் மரபுகளை மீட்டெடுக்கும்

(10 ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடுதல் இரசாயனப் பசளைப் பிரயோகத்தினால் சூழலில் ஏற்படும் பாதகமான விளைவுகள்

ஒரு குறிப்பிட்ட விளைநிலத்திலிருந்து கூடிய பயிர் உற்பத்தியைப் பெறுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வெவ்வேறு தொழில்நுட்ப முறைகளுள் பசளைப் பிரயோகமும் ஒன்றாகும் தாவரம் ஆரோக்கியமாக வளர்ந்து தரமுள்ள கூடிய விளைபொருட்களைத் தருவதற்கு இயற்கைப்பசளையுடன் சிபார்சு செய்யப்பட்ட அளவில் இரசாயனப் பசளையையும் உபயோகித்தல் அவசியமானதாகும்.

ஆரம்ப காலத்தில் விவசாயிகள் கூடியளவில் இயற்கைப் பசளைகளை மாத்திரம் பாவித்துப் பயிர் செய்தனர். சனத்தொகை அதிகரிக்கத் தொடங்க உணவுத் தேவையும் அதிகரித்தது இதனால் பண்டைய விவசாயமுறைகளை குறைத்து நவீன விவசாயத் தொழில்நுட்பங்களைப் பாவித்து அதிக உற்பத்தியைப் பெறுவதற்கு ஆரம்பித்தனர். இரசாயனப் பசளைப் பிரயோகமும் நவீன விவசாயத் தொழில்நுட்பங்களில் ஒன்றாகும்.

விவசாயத் திணைக்களம் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற பிரதான மூலகங்கள் உள்ளடங்கலாக சமச்சீர்ப்பசளைப் பிரயோகத்தின் முக்கியத்துவத்தை முன்வைப்பதுடன் வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான இந்த இரசாயனப் பசளைகளையும், அவைகள் இடப்பட வேண்டிய காலங்களையும் சிபார்சு செய்து வந்துள்ளது. தொடர்ந்தும் சிபார்சு செய்து வருகின்றது

இரசாயனப் பசளையை உபயோகிக்க ஆரம்பித்த விவசாயிகள் குறிப்பிட்ட சிபார்சு செய்யப்பட்ட அளவிற்கு அதிகமாகவும், சமச்சீரற்ற முறையிலும் பாவித்ததால் மண்ணும், நீரும், பயிர்களும் பாதிப்படைந்து வந்துள்ளன. தொடர்ந்தும் இந்த இரசாயன உரங்களைக் கூடுதலாக உபயோகிப்போமானால் நம் இயற்கைவளங்கள் எல்லாம் பாதிப்படைந்து சூழலில் பாதகமான விளைவுகள் ஏற்படும் கூடுதலான இரசாயன உரங்களின் பாவனை பின்வரும் முறைகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

☆ பயிருக்கு ஏற்ற சமச்சீர்ப் பசளைப் பிரயோகம் செய்யாவிடின் குறைவாக உள்ள மூலகம் பயிர் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உற்பத்தியைக் குறைக்கின்றது

ச. சின்னத்துரை
உதவி விவசாயப் பணிப்பாளர் கல்வியும் பயிற்சியும் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திருநெல்வேலி.

☆ நைதரசன் பசளையைக் (அமோனியம் சல்பேற் அல்லது யூறியா) கூடுதலாகப் பாவித்தால் பயிர்களின் பதிய வளர்ச்சி கூடுதலாக நடைபெறுவதுடன் பீடை நோய்களின் தாக்கங்களும் அதிகரிப்பதுடன்உற்பத்தியும்குறைகின்றது.

☆ நைதரசன் பசளையை அளவுக்கு மேலதிகமாகப் பாவிக்கும் போது மேலதிக பசளை நீரில் கரைந்து தரைக்கீழ் நீருடன் கலப்பதனால் குடிநீர் மாசடைகின்றது. நைதரேற் நச்சுத் தன்மையால் புற்று நோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன

☆ அமோனியம் சல்பேற்றைக் கூடுதலாகப் பாவிக்கும் போது நிலம் அமிலத்தன்மைய கமாறுகின்றது

☆ நீர் வடிப்புத் தன்மை குறைவாக உள்ள உவர் நிலங்களில் கூடிய இரசாயனப்பசளைகளைப்பாவிக்கும் போது உவர்த்தன்மை மேலும் அதிகரிக்கின்றது.

☆ மண்ணை வளமாக வைத்திருக்க உதவி செய்கின்ற மண்ணில் வாழுகின்ற பக்றீறியா, பங்கஸ், அல்கா போன்ற நுண்ணங்கிகள் கூடிய இரசாயனப் பசளைப் பிரயோகத்தால் குறைக்கப்படுகின்றன சிலவேளைகளில் சாகடிக்கப்படுகின்றன.

☆ மண்புழுக்கள் மண்ணை வளமாக்குகின்றன, கூடியஇரசாயன உரப்பாவனையால் இவைகளின் எண்ணிக்கை மிகக்குறைகின்றது மேற்குறிப்பிட்ட தாக்கங்களைக் குறைத்து பயிர்உற்பத்தியை அதிகரிக்கக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளாவன :

☆ மண்வளத்தைப் பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாகப் பயிர்களிலிருந்து கூடிய உற்பத்தியைப் பெறுவதற்குக் கூடியளவில் இயற்கைப் பசளைகளான எருவகைகள், கூட்டெரு, பசுந்தாட் பசளை போன்றவற்றை மண்ணுடன் சேர்த்தல் வேண்டும் ஒரு ஏக்கருக்கு 8 - 10 தொன் (20 வண்டில்) இயற்கைப் பசளையை வருடாவருடம் இடுதல் வேண்டும்.

★ சமச்சீர் இரசாயன உரப்பாவனையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

☆ ஒருங்கிணைந்த பசளைப் பிரயோக முகாமைத்துவத்துடன் நீர் முகாமைத்துவத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும்

## மண்வளத்தைப் பேணிப்பாதுகாக்க வல்ல இயற்கைப் பசளைகளின் பெறுமானம்

| பசளை | நைதரசன் N | பொஸ்பரஸ் P | பொட்டாஸ் K |
|---|---|---|---|
| மாட்டெரு | 0 60 | 0. 15 | 0. 45 |
| ஆட்டெரு | 0. 95 | 0. 35 | 1 00 |
| கோழி எரு | 1. 60 | 1. 75 | 0. 80 |
| சணல் | 0. 75 | 0 12 | 0 51 |
| வேப்பம் பிண்ணாக்கு | 5 40 | 1. 10 | 1. 05 |

## உரமொழிகள்

☆ அறிவிலே விளையுமா? எருவிலே விளையுமா?

☆ ஆட்டுரத்திலும் மாட்டுரமே மேல்;

☆ ஆட்டுரம் ஓராண்டு நிற்கும். மாட்டுரம் ஆறாண்டு நிற்கும்.

☆ ஆட்டெரு அவ்வருடம்; மாட்டெரு மறு வருடம்.

☆ ஈரம் போகாமல் எருவை மூடு.

☆ உரம் ஏற்றி உழவுசெய்.

☆ உரம் உதவுவது போல் ஊரார் உதவமாட்டார்.

☆ உரமே குடியானவனின் தங்கம்.

☆ உழவுப்பகையானாலும் எருவிலும் திராது

☆ உழுவதற்கு முன் உரத்தை நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்திட்ட அறிக்கை – Project Report

தற்காலத்தில் எந்தவொரு திட்டத்தையும் மேற்கொள்வதற்கு முன்னர் வேண்டப்படுவதே செயல்திட்ட அறிக்கையாகும். அரச நிறுவனங்களோ அன்றி தனியார் நிறுவனங்களோ ஒரு திட்டத்தை ஆரம்பித்து செயற்படுவதற்கு முன்பாக அது சம்பந்தப்பட்ட செயல்திட்ட அறிக்கையைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் அதன் அபிவிருத்திக்கு உதவ முன்வரும் வெளிநாட்டு நிறுவனங்களெல்லாம் அவை சம்பந்தப்பட்ட செயல்திட்ட அறிக்கையைத் தயாரித்த பின்பே அவற்றில் ஈடுபடுவதா? இல்லையா? என்ற முடிவை எடுக்கின்றன. இதன் மூலம் ஒரு நடவடிக்கையைமேற்கொள்வதற்கான எல்லா சாத்தியமான நடவடிக்கையும் செயல்திட்ட அறிக்கையில் ஆராயப்படும். இந்த அறிக்கையைத் தயாரிக்கும்போது குறித்தவொருதிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியம் இல்லையெனில் அது கைவிடப்படுவதும் இயல்பாகும்.

புதிய திட்டமொன்றை ஆரம்பிக்கும்போது அல்லது பழைய திட்டமொன்றை விஸ்தரிக்கும் போது செயல்திட்ட அறிக்கை அவசியமாகின்றது. திட்டத்தின் எதிர்கால வெற்றியும் தோல்வியும் செயல்திட்ட அறிக்கையூடாக அறிந்து கொள்ள முடியும். திட்டத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தையும் நிதி முகாமைத்துவத்தையும் பகுப்பாய்வு செய்வது செயல்திட்ட அறிக்கையினால் நிறைவேற்றப்படும். செயல்திட்ட அறிக்கை ஒரு திட்டத்தை மேற்கொள்வதற்கான எல்லா சாத்தியமான வழிகளையும் ஆராயும் என்பதால் திட்டம் வெற்றி பெறுவதை உறுதிப்படுத்த இந்த அறிக்கையின் பயன்பாடு முக்கியமாகின்றது. நாடொன்றுக்கான திட்டமோ அல்லது நிறுவனமொன்றுக்கான திட்டமோ தற்காலத்தில் செயல்திட்ட அறிக்கை தயாரிக்கப்படாமல் ஆரம்பிக்கப்படல் கூடாது. அவ்வாறு ஆரம்பித்தால் குறித்த திட்டம் வெற்றி பெறாமல் தோல்வியில் முடியக் கூடும் என்பதனாலேயே செயல்திட்ட அறிக்கை வேண்டப்படுகின்றது. பெரும்பாலான சிறிய திட்டங்களுக்கு தற்காலத்தில் நுண் செயல்திட்டம் (Micro Project) தயாரிக்கப்படும் வழக்கத்தைக் காணலாம்.

## செயல்திட்ட அறிக்கையின் குறிக்கோள்.

செயல்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்படும் பொழுது பல நோக்கங்களை முன்வைப்பதுண்டு. பல்வேறுபட்ட மாற்றுச் செயல்திட்டங்களில் மிகப் பொருத்தமானது எது என்பதைக் கண்டுகொள்ளுதல் அவசியம். இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட செயல்திட்டங்களே வெற்றியை உறுதிசெய்வனவாகவும் இருக்கும். சிறந்த முறையில் செயல்திட்டமானது திட்டமிடப்படின் தேவைப்படும் தகவல் எல்லாம் முன்கூட்டியே பெறப்படக் கூடியதாகவும் இருக்கும். இவ்வாறு பெறப்பட்ட தகவல்கள் குறித்த முயற்சியை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அதன் வெற்றி தோல்வியை உறுதி செய்யும். இதனால் வெற்றி தரக்கூடுமென்றால் மட்டுமே ஒரு திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் செயல்திட்டத்தை மேற்கொள்வதற்கான நிதி வளத்தின் கிடைப்பனவை உறுதிப்படுத்துவதும் செயல்திட்ட அறிக்கையின் குறிக்கோளாகும். வங்கிகள் போன்ற நிதி

க. தேவராஜா
தலைவர் வணிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் பின்னர் அவற்றை திருப்பிச் செலுத்தும் ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கும் செயல்திட்ட அறிக்கை உதவும்.

## செயல்திட்ட அறிக்கையின் உள்ளடக்கம்.

செயல்திட்ட அறிக்கை புதிய நிறுவனத்திற்கும் பழைய நிறுவனத்திற்கும் வேண்டப்படுவதாகும். செயல்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தும் போதுஉற்பத்தியின் தன்மை பற்றியும் அவை எந்நோக்கத்திற்காக பயன்படும் என்பதையும் செயல்திட்டத்திலிருந்து அறியக்கூடியதாக இருத்தல்வேண்டும். அத்துடன் ஆரம்பிக்கப்படும் உற்பத்திகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களின் கிடைப்பனவையும் உறுதிப்படுத்திக் கொள்ள செயல்திட்ட அறிக்கை முன்வரும். அத்துடன் உத்தேச உற்பத்திக்கான சந்தை வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களை அறியவும் செயல்திட்ட அறிக்கை உதவும்: அதே நேரம் விஸ்தரிக்கப்படும் நிறுவனமாயின் இதுவரைகாலம் அந்நிறுவனத்தின் வளர்ச்சிப்போக்குகள் அவதானிக்கப்பட்டு எதிர்கால விஸ்தரிப்புக்கான செயல்திட்டம் ஆக்கப்பட வேண்டும். பொதுவாக செயல்திட்டத்திலே,

சந்தை பற்றிய தகவல்
தொழில் நுட்பத் தகவல்
நிதிசார் தகவல்,

என்பவற்றை அறிந்து தீர்மானம் எடுப்பது செயல்திட்டத்தின் உள்ளடக்கமாக உள்ளன.

## சந்தை பற்றிய தகவல்

செயல்திட்டமொன்றைத் திட்டமிடும் பொழுது பொரு

## முகாமையியல்

ளுக்கு அல்லது சேவைக்கு இருக்கக்கூடிய சந்தைத் தகவல்களை அறிந்துகொள்வது அவசியமாகின்றது. சந்தையை மையமாகக் கொண்டே பொருட்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படவேண்டுமென்பதால் சந்தைத்தகவல்கள் செயல்திட்ட அறிக்கையை தயாரிக்க அவசியமாகிறது. இவற்றில் பின்வருவன முக்கியம் பெறும்.

1. உத்தேச உற்பத்திக்கான தற்போதைய மொத்தக் கேள்வியின் அளவு.
2. உத்தேச உற்பத்திச் சந்தையில் காணப்படுகின்ற பிரதியீட்டுப் பொருட்கள்.
3. உத்தேச உற்பத்திக்கு சந்தையில் காணப்படும் விலை.
4. சந்தையிலிருக்கும் போட்டியாளர்களும் அவர்களது வலிமைகளும்.
5. புதிய உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்காக அறவிடப்பட வேண்டுமென்ற விலை.
6. உத்தேச உற்பத்தியை விநியோகம் செய்வதற்கான விநியோக வழிகள்.
7. குறிப்பிட்ட கால எல்லையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கும் அளவு.
8. கொள்வனவாளருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் கழிவுகள்.

(8ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காச நோய்

க்ஷசம், சயரோகம், ஷயரோகம் என்று சதாரணமாக அழைக்கப்படும் காசநோய் மைக்கோபக்ரீறியம் டியூபர் குளோசிஸ் ( My cobacterium Tuberculosis) எனப்படும் பக்றீரியா நுண்ணங்கியின் தாக்கத்தினால் எமது உடலில் உண்டாகிறது. இந்நோய் ஒருவரில்இருந்து மற்றவருக்கு காற்று மூலம் பரவும் ஒரு தொற்று நோய். எமது உடலில் மயிர், நகம், பல் போன்றஉறுப்புக்கள்தவிர்ந்து தோல், தசை,மூளை, நிணமுடிச்சு, எலும்பு, குடல், ஈரல், சிறுநீரகம் என்று மற்ற எல்லா உறுப்புக்களையும் தாக்க வல்லது என்றாலும், ஏறத்தாள 90% ஆனோருக்கு நுரையீரலையே தாக்குகின்றது.

காசநோய் நாம் எண்ணியிருப்பதைவிட பயங்கரமான, ஆனால் வித்தியாசமான ஒரு நோய் உலகின் சனத்தொகையில் மூன்றில்ஒருபகுதியினர். அதாவது 200 கோடி மக்கள் (2 பில்லியன்) சயரோக கிருமிகளால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். சாதாரணமாக கூறினால் நீங்களும் நானும் இக் கிருமியினால் பீடிக்கப்பட்டுள்ளோம். அதுவும் ஒருமுறை இக்கிருமியினால்பீடிக்கப்பட்டால் அவர் இறக்கும் வரை இக்கிருமியினால் பீடிக்கப்பட்டிருப்பார். என்றாலும் இவர்களில் ஒருசிலருக்கே உடல் வலிமை குன்றி இருக்கும்பொழுது இக்கிருமி தனது பலத்தை திரட்டி, தாக்கி நோயை உண்டாக்கின்றது. ஆகவே கிருமி பீடித்திருந்தாலும் அவர்களில் சிலரே நோயாளி ஆகின்றார்கள். இந்த ஒரு சிலர் என்று கூறும் பொழுது இது முழுச் சனத்தொகையில் ஒரு பெரும் எண்ணிக்கை. உலகத்தில் தொற்று நோயினால் இறப்பவர்களது எண்ணிக்கையில், காசநோயால் இறப்பவர்களது எண்ணிக்கையே அதிகம். ஒவ்வொரு வருடமும், காச நோயினால் உலகத்தில் 3மில்லியன் (30இலட்சம்) பேர் மரணமடைகின்றார்கள் இரண்டாயிரமாம் ஆண்டில் மட்டும் புதிதாக ஒருகோடி ( 10மில்லியன் ) பேருக்கு காசநோய்த் தாக்கம் ஏற்படும் என்று உலக சுகாதார மையம் அறிவித்து இருக்கின்றது. இவர்களில் அதிகமானோர்எம்மைப்போன்றமூன்றாம் உலக நாடுகளில் வசிப்பவர்களாக இருப்பார்கள்.

இப்பிராந்தியங்களில் சமூகத்தில் இருக்கும் காசநோய் பீடித்தவர்களில் ஒரு சிறு தொகையினரே சிகிச்சைக்கு முன்வருவதானால்காசநோயாளராக கண்டுபிடித்து சிகிச்சைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இவர்களில் கண்டுபிடிக்கப்பட்டவர்களில் எண்ணிக்கை பின்வருமாறு:

| வட கிழக்கு சுகாதார பிராந்தியங்கள் | 1993 ம் ஆண்டு | 1994 ம் ஆண்டு | 1995 ம் ஆண்டு |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 314 | 257 | 243 |
| வவுனியா | 98 | 89 | 94 |
| மட்டக்களப்பு | 272 | 202 | 165 |
| அம்பாறை | 119 | 132 | 129 |
| திருகோணமலை | 79 | 76 | 149 |
| வடக்கு கிழக்கு | 882 | 756 | 780 |
| இலங்கை | 6809 | 6132 | 5710 |

காசநோய் இலங்கை, இந்தியா பாகிஸ்தான் மியான்மர் (பர்மா) ஆபிரிக்க நாடுகள் போன்ற மூன்றாம் உலக நாடுகளைப் பாதிப்பதற்கு முக்கிய காரணம் வறுமையும், சுகாதார அறிவு, பழக்க வழக்கம் குறைந்திருப்பதுமாகும். நோயுற்றவர்இருமுகின்றபோது நுரையீரலில் இருக்கின்ற கிருமி சளியுடன் வெளியேறுகின்றது. எதிரில் அருகில் இருப்பவர்கள் இக் காற்றை உள்வாங்கும்பொழுது கிருமிகள் அவர்களது நுரையீரலைச் சென்றடைகின்றன. அதுமட்டுமல்லாமல் எம்மிடையே மற்றவர்கள் வெறுக்கத்தக்கஒருபழக்கம் இருக்கின்றது. இருமி காறி சளியை வாயில் எடுத்து எந்த இடத்தில் இருந்தாலும் '' தூ'' என்று பாதையில்வெளியில்துப்பிவிடுகிறோம் இதை எம்மவர் செய்யும் பொழுது வெளிநாட்டினர் அருகிலிருந்து மூக்கைக்கைக்குட்டையினால் மூடிக்கொண்டு எட்டிப்பாய்ந்து ஓடி விடுவார்கள். எம்மைக் '' கசக்காறன் '' என்று வெறுப்புடன்நோக்குவார்கள். இவ்வாறு நாம் உமிழும் எச்சில் சளியில் காசநோய்க் கிருமிகள் கோடிக்கணக்கில் இருக்கின்றன. நிலத்தில் இருக்கும் எச்சில் காய்ந்தபின்பும் கிருமிகள் உயிருடன் பல மணி நேரம் இருக்கும் காற்று, தூசியுடன் இவை மேலெழுந்து சுவாசிப்பவர் நாசிக்கூடாக உள்ளே நுரையீரலுக்கும் அங்கிருந்து இரத்தம், நிணநீர், சளி முதலியவற்றின் ஊடாக உடலின் வேறு பகுதிகளுக்கு சென்று விடுகின்றன.

நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளஒருவரது. உடலுக்குள் சென்ற நுண்ணங்கிகள் வெற்றி கொள்ளப்பட்டு வேறு இடங்களுக்கு வெளியேறமுடியாதபடி சுண்ணாம்பு - கல்சியம் நிறைந்த கவசமிடப்பட்டு சிறைவைக்கப் படுகின்றன. போசாக்குக் குறைபாடு, நீரிழிவு, எயிட்ஸ், கர்ப்பம்தரித்தல், ஸ்டிரோயிட் (Steroid) போன்ற சிலமருந்துகள்உட்கொள்ளல் போன்ற சந்தர்ப்பங்களில் இக்கவசம் போன்ற '' சிறை '' பலமிழந்து விட காசநோய்க்கிருமிகள் இலகுவாக உடலினுட்சென்று தாக்கத் தொடங்குகின்றன.

காசநோயாளரின் குடும்பஅங்கத்தவர் காற்றோட்டம், வெளிச்சம் குறைந்த அறைகளில் நெருக்கமாக வசிப்பவர்கள் மேற் குறிப்பிட்ட நோய் உள்ளவர்கள் காசநோய்க் கிருமித்தாக்கத்திற்கு இலகுவில்ஆளாகின்றார்கள்.


வைத்திய கலாநிதி,

**செ. சு நச்சினார்க்கினியன்**

விரிவுரையாளர், மருத்துவபீடம்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


நோய்த்தாக்கம் இருப்பவர்கள் நிறைகுறைந்து மெலியத் தொடங்குதல், தொடர்ச்சியான இருமல் சளியுடன் இரத்தம் வெளியேறுதல், இரவு நேரங்களில் மெல்லிய காய்ச்சல், சோர்வு, களைப்பு, நிணநீர் முடிச்சுகள் வீங்குதல் முதலியபல அறிகுறிகளை கொண்டிருப்பார்கள். எக்ஸ்றே படம் சளியில் கிருமிகளை இனங்காணல் முதலிய பரிசோதனைகள் மூலம் ஒருவருக்கு காசநோய் கண்டறியப்படுகின்றது.

காசநோய் நோயாளி சரியான முறையில் மருந்துகளை எடுப்பதன் மூலமும் வைத்திய ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலமும் பூரண குணமடைய முடியும். மருந்துகளை சரியான முறையில் எடுக்கும் நோயாளியின் இருமல், சளியில் ஒரேமாதத்திலேயே நோய்க்கிருமிகள் வெளியேறுவது தடுக்கப்படுகின்றது. ஆகவே

( 7-ம் பக்கம் பார்க்க )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காச நோய்

( 6-ம் பக்கத் தொடர்ச்சி )

இக்காலப் பகுதியில் நோயாளியை குடும்ப சூழலில் இருந்து தனிமைப் படுத்திவைத்திய சாலைகளில் அனுமதித்து சரியானமருத்துவ சிகிச்சை அளிப்பதன் மூலம் நோய்மற்றவர்களுக்குப் பரவுவதைத் தடுக்கமுடியும். இதன்பின் நோயாளி வீடு சென்று தனது நிலைமைக்கேற்ற வேலைகளைச் செய்துவரலாம். ஆனால், வைத்திய ஆலோசனைப் பிரகாரம் மருந்துகளைத் தொடர்ந்து எடுக்க வேண்டும். இது மிகவும் அவசியம். மருந்து எடுக்காது கிருமிகளைப் பரப்பும் ஒரு காச நோயாளி சராசரியாக 20 ல் இருந்நு 28 பேர் வரையான தமது வீட்டார், அயலவர். நண்பர்கள் முதலியோருக்கு நோயைப்பரப்புகின்றார் ஆகவே நோயாளியுடன் நெருங்கிப் பழகியவர்களும் தம்மை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்வது சிறந்தது.

காசநோய் உடலின் எந்தப் பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தாலும் மிகவும் அதிகமானோருக்கு நுரையீரலிலேயே தாக்கம் இருக்கின்றது. நுரையீரலில் தாக்கம் இருப்பவர்கள் மட்டுமே தமது சளி எச்சில் முதலியவற்றின் மூலம் சுகாதாரம் அற்ற முறையில் துப்புவது, இருமுவது போன்று நோயை மற்றவர்களுக்குப் பரப்புகின்றார்கள்.

# சுகவளம்

## மருத்துவ பரிசோதனை அவசியம்

மேற்கண்டவாறு நாம் காச நோய் கண்டவர் என்று ஒருவரைச் சந்தேகிக்கும் பொழுது அவரை மருத்துவ நிலையம் செல்ல வேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறி, மருத்துவ உதவி பெற வைக்க வேண்டும். முக்கியமாக குழந்தைகள் விடயத்தில் நிறை கூடாமல் இருப்பவர்கள். அல்லது நிறைகுறைந்து வருபவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது மிக அவசியம் காசரோகத்தின் ஆபத்தை உணர்ந்தபடியால் மருத்துவ உதவி பெற மறுப்பவரை சட்ட நடவடிக்கை மூலம் உடன் மருத்துவ உதவி பெறவும் வைக்க இயலும்.

சாதாரண காரணங்களான சுற்றாடல், சுகாதாரம், நிறையுணவு காற்றோட்டமான வீடு, நெருக்கம் இல்லாத அறைகள், படுக்கை முதலியவற்றை சீராக்கினால் காசநோய் வருவதை பெரும்பாலும் தடுத்துக் கொள்ளலாம் எனினும் பி சி ஜி (Bacille Calmette Guerin பெசில் காமெட் குவெரின்) ஊசி மருந்து செலுத்துவது அத்தியாவசியமாகும். சாதாரண சுகதேகியான குழந்தைக்கு எவ்வளவு விரைவில் (பிறந்து 4 மணித்தியாலத்தின் பின்) பி. சி ஜி. ஏற்றமுடியுமோ அவ்வளவு விரைவில் ஏற்றுவதன் மூலம் சிறுவயதில் மூளையில் காச நோய் ஏற்படுவதையும், (டி. பி. மெனின் ஜைடிஸ்) உடலில் இரத்தத்தின் மூலம் பரவி (மிலியரி டி. பி.) பயங்கர விளைவுகள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

சிறுவயதில்இந்தவகை காசநோய் தாக்கத்தினால் மூளைவளர்ச்சி உடல் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், நீண்டகால சுகயீனம், மரணம் முதலிய ஏற்படமுடியும் மற்ற உறுப்புக்களில் ஏற்படும் காசநோயின் தாக்கம் இலகுவாக மருந்துகள் மூலம் குணப்படுத்த முடியும் என்பதால் பி சி.ஜி ஊசி ஏற்றிறிய பின்பும் ஒரு சிலருக்கு காசநோய் பீடிக்க முடியும் என்று விஞ்ஞானரீதியாக கண்டுபிடித்த பின்பும் பி.சி ஜி. ஊசி ஏற்றுவது அவசியம் என உலக சுகாதார மையத்தினால் அறிவுறுத்தப்படுகிறது.

நோய் கண்டஒருவர் முறையாக மருந்துகள் எடுக்கின்றாரா என்பதை அவதானித்தல் மிக மிக அவசியம். இதில் குடும்ப நலசேவையாளர்பங்கு பெரிது. முன்பு இரண்டு வருடங்களுக்கு மருந்து எடுக்கவேண்டும் என்று இருந்த நிலை இன்று சக்தி வாய்ந்த மருந்துகளைப் பாவிப்தன் மூலம் ஆறு மாதத்திலேயே காசநோயைக் குணப்படுத்தலாம் என்றும் ஒருமாதத்திலேயே கிருமியை பரப்பும் நிலை மாறி விடும். என்றும் அறியப்பட்டுள்ளது.

ஆனால் மருந்து முறையாக எடுக்க வேண்டியது மிக அவசியம் இதனை நன்றாகக் கண்காணிக்க வேண்டும் மருந்தின் பக்கவிளைவுகளை அறிந்து வைத்துக் கொண்டு தேவை ஏற்படின் மருத்துவ உதவிக்கு நோயாளியை அனுப்புவதும் அவசியம் நோயின் தாக்கம் குறையும் பொழுது அவரது நோயின் அறிகுறிகள் குறையும். காச்சல் நின்று, இருமல்குறைந்து சளி வற்றி பசி உண்டாகி உண்பது கூடி நிறை அதிகரிக்கும். இம்மாறுதல்கள் ஏற்படாதுபோனால் அதிகரித்த கவனிப்பு அவசியம்; மருத்துவர் தேவையான வேறு பரிசோதனைகள் செய்து அவசியமேற்படின் மருந்துகளை மாற்றவேண்டி வரலாம். இவை அனைத்து மாறுதல்களும் வீட்டுத் தரிசிப்பின் போது கண்டு அறியலாம்.

சுகாதார திணைக்கள அதிகாரிகளும் குடும்பநல சேவையாளரது சேவையும் அவர்களது பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து தூரதிருஷ்டியுடன் செயற்பட்டால் இன்று மறுபடியும் உலகெங்கும் பரந்து பரவி வரும் காச நோயை எளிதில் வெற்றி கொள்ளமுடியும். சுகாதாரதிணைக்கள ஊழியரும் அதிகாரி, உத்தியோகத்தர் என்பதை விடுத்து சேவையாளராக இயங்கினால் வெற்றி நமதே. இலகுவாக வெற்றி பெறக்கூடிய இவ்வாய்ப்பை இழந்தால் மலேரியாவுடன் இன்று படும் பிரச்சனையைக் காசநோயுடன் சேர்த்து எதிர் கொள்ள வேண்டிவரும்.

## " கொலரா "

### நோய்வராமல் இருக்க ..

- கொதித்தாறிய நீரைப் பருகுங்கள்
- உணவை சமைப்பதற்கும், பரிமாறுவதற்கும், உட்கொள்வதற்கும் முன் கைகளை சவற்காரம் இட்டு நன்றாகக் கழுவுங்கள்.
- சமைத்தஉடனேயே உணவை உட்கொள்ளுங்கள்.
- உணவுகளில் ஈ மொய்க்காது மூடிவையுங்கள்.
- மூடப்படாது விற்பனைக்குள்ள உணவுகளை உட்கொள்ளாதீர்கள்.
- குளிரூட்டப்பட்ட உணவு வகைகளில் (ஐஸ்கிறீம் முதலியன) கொலராக் கிருமிகள் அதிக காலத்திற்கு உயிருடன் இருக்கும். எனவே அவற்றைக்கடைகளில் வாங்கிஉண்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- பாடசாலை, வேலைத்தளங்கள் பிரயாணம் போன்றவற்றிற்கு வீட்டிலிருந்து உணவையும், கொதித்தாறிய குடிநீரையும், கொண்டு செல்லுங்கள்.
- கொலரா நோய் பரவும்காலங்களில் ஆறு, குளம் முதலியவற்றில் நீராடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- எப்போதும் எல்லோரும் எங்கும் மலசல கூடத்தையே பயன்படுத்துங்கள்.

நன்றி - சுகமஞ்சரி

# செயல்திட்ட...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

9. உற்பத்தியை சந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கக்கூடிய முறைகள்,

10. விற்பனை மேம்படுத்தல்களுக்கான தேவையும் அவற்றிற்கு ஏற்படும் செலவினங்களும்,

என்பவை செயல்திட்ட அறிக்கையினை தயாரிக்கும் வேலையில் அறிந்து கொள்ளப்பட வேண்டிய சந்தைத் தகவல்கள் ஆகும்.

## தொழில்நுட்ப தகவல்கள்.

செயல்திட்ட அறிக்கையினை தயாரிக்கும் பொழுதும் தொழில் சார்புடையதுமான தகவல்களை அறியப்படல் வேண்டும் நிறுவனம் எத்தொழிலை மேற்கொள்ள இருக்கின்றதோ அதனுடன் தொடர்புடைய தகவல்கள் செயல்திட்ட அறிக்கையில் அடக்கப்படல் வேண்டும். அவற்றுள் பின்வருவன முக்கியம்பெறும்.

1. உற்பத்தித் தொழில்பாட்டுத்திட்டம் அறிந்து கொள்ளப் படல் வேண்டும். தொழில் நுட்பம் சார்ந்த அறிவுரைகள் பெறப்படுவதற்கு வழிவகுக்கப்பட வேண்டியிருக்கும்,

2. உற்பத்திக்கு தேவைப்படும் இயந்திர உபகரணங்கள் பற்றிய விபரம் திட்டமிடப்படல் வேண்டும். இயந்திரங்களின் இயலளவு, விலை, உதிரிப்பாகங்களின் கிடைப்பனவு, பராமரிப்பு என்பன செயல்திட்ட அறிக்கையில் காட்டப்பட வேண்டும்.

3 உற்பத்திக்கு தேவைப்படும் மூலப் பொருட்கள் தொடர்பான தகவல்கள் செயல்திட்ட அறிக்கைக்கு அவசியமாகும் மூலப்பொருட்கள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ பெறப்பட வேண்டும் என்பதும் அவை தேவைப்படும் அளவு, விலை என்பனவும் நகர்த்தப்பட வேண்டிய தூரம், பராமரிப்பு என்பனவும் செயல்திட்ட அறிக்கையில் காட்டப்பட வேண்டும்

4. நிறுவன அமைப்புக்கு பொருத்தமான இடம் செயல்திட்ட அறிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எப்பொழுது உட்கட்டமைப்பு வசதிகள் உள்ள இடத்திலும் மூலப்பொருளை வரவழைத்துக் கொள்வதிலும் முடிவுப் பொருளை விற்றுக் கொள்வதிலும் இலகுத்தன்மை வைத்திருக்கும் இடம் நிறுவனம் அமைப்பதற்கும் பொருத்தமான இடமாகும்.

5. கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் காணியும் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் கட்டிடமும் செயல்திட்ட அறிக்கையில் காட்டப்படல் வேண்டும். எதிர்காலத்தில் கட்டிடங்களை விஸ்தரிப்பதற்குத் தேவையான காணி கிடைப்பதனைச் செயல்திட்ட அறிக்கையில் காட்டுதல் வேண்டும். கட்டிடம் நிலமாடிக் கட்டிடமாக அமைய வேண்டுமா? அன்றி பலமாடிக் கட்டிடமாக அமைய வேண்டுமா என்பதனையும் திட்டமிடல் வேண்டும்.

6. உட்கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்துவது செயல்திட்ட அறிக்கையில் முக்கியம் பெறும், நீர், மின்சாரம், தொடர்பாடல் போன்ற தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியம் செயல்திட்ட அறிக்கையில் காட்டப்படல் வேண்டும்.

7 நிறுவனத்திற்கு தேவைப்படும் ஆளணியினர் பற்றிய விபரத்தை செயல்திட்ட அறிக்கையில் காட்டுதல் வேண்டும் நிறுவனத்திற்கு அண்மையில் ஆளணி பெறப்பட முடியுமா என்பதை அறிதல் அவசியம். அத்துடன் பயிற்றப்பட்ட ஆளணியின் கிடைப்பனவும் அறியப்பட வேண்டும், பயிற்றப்படாத ஆளணி மட்டுமே கிடைக்குமெனில் அவர்களைப் பயிற்றும் வசதி கிடைக்குமா என்பதையும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

8. சூழல் மாசடையும் நிலையை முன்கூட்டியே தடுப்பதற்கான நடவடிக்கைகளை செயற்திட்ட அறிக்கையில் காட்டுதல் வேண்டும். தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் புகை, தூசி என்பன காற்றை மாசுபடுத்துவதும், கழிவுப்பொருட்கள் நீரை அசுத்தமாக்குவதும் வழக்கம். எனவே அவை மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் நடவடிக்கை எடுப்பதற்கு செயல்திட்டம் உதவும்

9. தொழில் முயற்சிக்கான அனுமதி பெறும் நடவடிக்கைகளையும் செயல்திட்டத்தில் காட்டுதல் வேண்டும். அரசாங்க நிறுவனங்களிடமிருந்துவேறுபட்டதொழில் முயற்சிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட வேண்டும். என்பதனால் அது பெறப்படுவதனை செயல்திட்டம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

10. செயல்திட்டம் தொடர்பான கிரயத்தைக்கணிப்பிடுவது செயல்திட்ட அறிக்கையில் முக்கியம் பெறுகின்றது. இதில் நிலையான சொத்துக்களுக்கான கிரயங்களும் தேறிய தொழிற்படு மூலதனத் தேவைகளும் திட்டமிடப்படல் வேண்டும். இதனூடாக செயல்திட்டம் ஏற்படுத்தக்கூடிய மொத்த செலவினைக் கணிப்பிடமுடியும்.

## நிதிசார்தகவல் திரட்டுதல்.

செயல்திட்டத்தில் நிறுவனமானது உற்பத்திசெய்யும் பொருட்கள் சேவைகள் ஆகியவற்றால் பெறப்பட இருக்கும் வருமானம் இலாபம் என்பன பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். நிதிசார் தகவல்களில் இலாபத்தன்மையைக்கணிப்பது முக்கியம் பெறும், உற்பத்தி தொடர்பாக மாறும் கிரயம், நிலையான கிரயம் ஆகியவற்றைக் கணிப்பிடுவதன் மூலம் உற்பத்திக்கான மொத்தக்கிரயம் கண்டுபிடிக்கப்படும் இதிலிருந்து இலாபம் கண்டுபிடிக்கப்பட இயலும் இலாபநட்ட மதிப்பீட்டில் பின்வருவன முக்கியம் பெறும்.

## மாறும்உற்பத்திக்கிரயம்.

உத்தேச உற்பத்தி அளவுக்கமைவாக மாற்றமடையக் கூடிய செலவுகள் மாறும் உற்பத்திக் கிரயம் எனப்படும். மாறும் உற்பத்திக்கிரயம் என்பதற்குள் மூலப்பொருள் கிரயம், நேர்க்கூலி கிரயம், நேர்ச்செலவுக் கிரயம் என்பன மாறும் உற்பத்திக் கிரயமாகும். இச்செலவு உற்பத்தியின் அளவாகக் கூடிக் குறையும் பண்பைக் கொண்டிருக்கும்.

## நிலையான செலவுக்கிரயம்

தொழிற்சாலைகளை இயக்கும் செலவு, பேணுதல் செலவு, அலுவலக வேதனம், மேற்பார்வையாளர் வேதனம், வாடகை, காப்புறுதி, நிலையான சொத்தில் தேய்மானம் வங்கி வட்டி போன்றவை நிலையான செலவுக் கிரயத்தில் அடக்கப்படும்.

## தேறிய இலாபம்

குறித்தவொரு ஆண்டுக்கான விற்பனைவருமானத்திலிருந்து மொத்தச் செலவுகளைக் கழிப்பதன் மூலம் பெறப்படுவதே தேறிய இலாபமா

(10ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிக்காதே; சீறு...

காட்டு வழியே சென்ற முனிவர் ஒருவரை விஷப் பாம்பொன்று துரத்தியது. அப்போது அவர் தம்மிடமுள்ள மந்திரசக்தியால் பாம்பை மயக்க வைத்து பாம்புக்கு நல்ல உபதேசம் கொடுத்து ஒருவரையும் தீண்டாது வாழ்ந்தால் மோட்சம் அடையலாம் என்று சொல்ல, பாம்பும் அவர் சொன்னபடி நடந்து வந்தது.

இதனால் அயலில் உள்ள பிள்ளைகள் கடிக்காத பாம்புதானே என்று பாம்பைக் கொல்வதற்கு எத்தனித்தார்கள். இதனால் பாம்பு பயந்து தனக்கு உணவு தேடவும் வெளியே வராது சாகும் தறுவாயை அடைந்து விட்டது.

## மணிமொழிக் கதைகள்

பிறிதொரு நாள் அம் முனிவர் அவ்வழியால் சென்றபோது பாம்பைத் தேடிக்கண்டுபிடித்து ஏன் இப்படி மெலிந்துள்ளாய் என்று வினவ, பாம்பு, நான் இப்போது ஒருவரையும் கடிப்பதில்லையே என அறிந்து மக்கள் என்னைத் துன்புறுத்துகிறார்களே அவர்களுக்குப்பயந்து உணவுதேடாமல் இருந்துள்ளேன் என்று சொல்லியது.

அதற்கு முனிவர் பாம்பே, அவர்களை கடிக்க வேண்டாம் என்றல்லவா சொன்னேன். சீறிப்பயமுறுத்த வேண்டாம் என்று சொல்லவில்லையே என்று சொன்னார். உன்னைப் பாதுகாத்துக்கொள் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாதே.

நன்றி - மணிமொழிக் கதைகள்

☆ ☆ ☆

## அறிவியல் உண்மை

### நினைத்தால் நிறம்மாறும் " பச்சோந்தி "! இயற்கை அளித்துள்ள பாதுகாப்பு !

❁ பச்சோந்தி பல்லி குடும்பத்தைச் சேர்ந்தது. தரையில் முட்டையிட்டு குஞ்சுபொரிக்கும் இடத்தின் வெப்பநிலைக்கு ஏற்ப முட்டைகள் பொரிய 4 முதல் 10 மாதங்கள் ஆகும்

❁ தோலில் உள்ள கண்ணறைகள் நிற அணுக்களால் ஆனவை. ஒளி ஊடுருவிகள் வெப்பம் ஒளி ஊடுருவும் போது இவை விரிந்து சுருங்குகின்றன. கோபம், ஆத்திரம் பயம் ஆகியவையும் இதைவிரிந்து சுருங்க வைக்கின்றன. உடனே நிறமாற்றம் நிகழ்கிறது. சூழ்நிலையின் நிறம் இதைப்பாதிப்பதில்லை. வெப்பமும், குளிர்ந்த தன்மையுமே நிறமாற்றத்தை நிகழ்த்துகின்றன. இந்த நிறமாற்றம் கண்ணிமைப்பது போல் இயற்கையாக நிகழ்கிறது. இது பச்சோந்திக்கு இயற்கை அளித்துள்ள பாதுகாப்பு.

❁ தாக்கவரும் விலங்குகளைப் பயப்படுத்த கருத்த உடலைக்காற்றால் உப்பவைத்து பெரிதாகக் காட்டி " உஸ் " ஸென்று சீறிக் கலங்கவைக்கும்.

## சிறைக் கூட நூல்கள்

சிறையில் இருந்த தலைவர்கள் எழுதிய நூல்கள்:

☆ மகாத்மாகாந்தி - சத்திய சோதனை
☆ ஜவஹர்லால்நேரு - டிஸ்கவரிஓவ் இந்தியா
☆ திலகர் - கீதையின் சாரம்
☆ வ.உ.சிதம்பரப்பிள்ளை - திலகரின்வாழ்க்கை வரலாறு
☆ சுபாஷ்சந்திரபோஸ் - சுதந்திரப் போராட்டம்
☆ மார்க்கோபோலோ - பயண அனுபவங்கள்
☆ மாட்டின்லூதர்கிங் - பைபிள் (ஜெர்மன் மொழிபெயர்ப்பு)

## சிறுவர் உரிமைகள்

### முக்கிய ஆண்டுகளும் திகதிகளும்

1923 - ''எக்வான்ரின் ஜெப்'' சிறுவர் உரிமைப் பிரகடனத்தை வரைந்தார்.

1923 - சிறுவர்கள் உரிமைப் பிரகடனம் சர்வதேச சங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1948 - சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஐ. நா. பொதுச் சபை ஏற்றுக்கொண்டது.

1959 இரண்டாவது சிறுவர்கள் உரிமைப் பிரகடனத்தை ஐ நா. சபை ஏற்றுக் கொண்டது.

1979 - குழந்தைகளின் சர்வதேச ஆண்டு, சிறுவர் உரிமை சமவாயத்தைவரைவதற்கு செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டது.

1989 - சிறுவர் உரிமைகள் சமவாயம் ஐ.நா. பொதுச் சபையினால் 1989 ஆண்டு நவம்பர் 20ம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1990 - செப்டெம்பர் 2ம் திகதி சமவாயம் அனைத்து உலக சட்டமாக நடைமுறைக்கு வந்தது

## குண்டுவீச்சுக்களினால் குழந்தைகளுக்குப் புற்று நோய்

வளை குடாயுத்தத்தின் போது அமெரிக்க விமானங்கள் ஈராக் மீது குண்டுமாரி பொழிந்ததினால் ஈராக்கில் உள்ள குழந்தைகள் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். என்று கனடிய டாக்டர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். இப்பாதிப்பிற்கு அவர் கூறியுள்ள காரணம்என்னதெரியுமா? விமானக் குண்டுவீச்சின்போது குண்டுகளில் இருந்து வெளிவந்தகதிர் வீச்சுக்களே! இதனால் ஈராக்கின் நிலமும், நீரும் சுற்றுப்புற சூழலும் மாசுபட்டு விட்டதென்றும் அவர் கூறியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல்திட்ட .

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கும். இதனைக் கணக்கியல் விகிதங்களால் காட்டிவிட முடியும் வழமையில்

$$\frac{\text{தேறிய இலபம்}}{\text{விற்பனை வருமானம்}} \times 100$$

என்ற விகிதம் பயன்படுத்தப்படும் இதே போல் இலாப இயலுமை கணிக்கப்படுவதில் மூலதனத்துக்கான இலாப வீதமும் முக்கியம் பெறும் இதற்கென

$$\frac{\text{தேறிய இலாபம்}}{\text{ஈடுபடுத்திய மூலதனம்}} \times 100$$

என்ற கணக்கியல் விகிதம் பயன்படுத்தப்படும் ஈடுபடுத்திய மூலதனம் என்பது செயல்திட்ட கிரயத்தையே குறித்து நிற்கும்.

### செயல்திட்டத்தின் இலாபம்,

உத்தேசிக்கப்பட்ட செயல்திட்டத்தின்மூலம் ஒரு தொழில் முயற்சி இலாபத்தையா அல்லது நட்டத்தையா அடையும் என்பதைக் கணித்தல் வேண்டும். இதனைக் கணிப்பிட

$$\frac{\text{மொத்த நிலையான செலவு}}{\text{பொருளின் விற்பனைவிலை - பொருளின் மாறும் செலவு}}$$

என்ற வாய்ப்பாடு பயன்படுத்தப்பட முடியும். இதில் உத்தேச செயல்திட்டத்தின் மூலம் இலாபம் உழைக்க எந்த அளவில் உற்பத்தி மட்டம் வைத்திருக்கப்பட வேண்டும் என்பது கண்டறியப்படும். இதனையே இலாப நட்ட மற்ற புள்ளி எனக் கொள்வர்.

### ஏற்றுமதி நெகிழ்வுத் தன்மை.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் எந்தளவு பொருட்கள் வெளிநாட்டில் சந்தைப்படுத்தப்படலாம என்பதும் முக்கியமாகும். மொத்த விற்பனை வருமானத்தில் என்ன நூற்றுவீதம் மொத்த ஏற்றுமதி வருமானம பெற்றுக்கொள்கின்றது எனக் கூறுவதே ஏற்றுமதி நெகிழ்வுத் தன் தன்மையாகும். இதனைக் கணிப்பிட

$$\frac{\text{மொத்த ஏற்றுமதி வருமானம்}}{\text{மொத்த விற்பனைவருமானம}} \times 100$$

என்ற வாய்ப்பாடு பயன்படுத்தப்படும் உள்நாட்டு விற்பனை வருமானத்துடன் வெளிநாட்டு விற்பனை வருமானமும் இலாபம் உழைக்கும் ஆற்றலை அதிகரிக்கும் என்பதனால் நிதி நிலைமையைத் திட்டமிடும் பொழுது ஏற்றுமதி நெகிழ்ச்சித்தன்மையை அதிகரிக்கும்

தற்காலத்தில் எந்தவொரு நடவடிக்கையினை ஆரம்பிக்கும் பொழுதும் செயல்திட்ட அறிக்கை வேண்டப்படுகின்றது எதிர்காலம் நிச்சயமற்றதாகவும் மாற்றங்கள் நிறைந்ததாகவும் இருப்பதனால் எதிர்கால நடவடிக்கைகளை சரிவர முன்னுணர செயல்திட்ட அறிக்கை அவசியமாகின்றது, இதன் அடிப்படையிலேயே லங்கையில் இயங்கிவரும் வெளிநாட்டு நிறுவனங்களெல்லாம் நுண் செயல்திட்ட MicroProject அறிக்கைகளைத் தயாரித்துக்கொள்கின்றன. இதன் மூலமே எந்தவொரு தொழில் முயற்சியையும் தோல்வியின்றி இயக்க முடிகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஏற்கனவே வளர்ச்சி பெற்ற செயல்திட்ட நடவடிக்கைகள் இலங்கையிலும் அண்மை ஆண்டுகளில் பிரபலம் பெற்றுவருவருவதைக் காணமுடிகின்றது.

## ஆடல் அரங்கு

( 3 ம பக்கத் தொடர்ச்சி )

சீர் திருத்தங்களாக அமைந்தன. உதாரணமாக பெரும் மரபு ஆடலாகிய பரத நாட்டியம் மீட்டெடுக்கப்பட்பட்டது. ஆனால் நாட்டுக்கூத்துகள் மீட்டெடுக்கப்பட வேண்டிய தேவையை எதிர்கொள்ளவில்லை. ஏனெனில் நாட்டுக்கூத்துக்கள் சமூக அடித்தளத்தில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தன, பரத நாட்டியம் நிலமானிய சமூகக் கட்டமைப்பில் மேலோங்கியவர்களின் வீச்சிலும் தளத்திலிருந்தமையால் நலிவுக்குள்ளாகியது. பின்னர் மீட்டெடுக்கும் முயற்சிக்கும் உட்படுத்தப்பட்டது.

இந்திய சமூக அமைப்பின் கீழ்த் தட்டு மக்களின் ஆடல்களைப் பின் வருமாறு பாகுப்பாய்வு செய்யலாம்.

(1) நாடோடி வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நடனங்கள்.

(2) மாயவித்தை, மந்திரம், உருக்கொள்ளல், படையல், கருவளப் பெருக்கு முதலிய மரபுவழிப் பயிர்ச்செய்கை முறைமையை அடிப்படையாகக் கொண்ட ஆடல்கள்.

(3) நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக இல்லாது, பயிர்த் தொழிலும் அதனோடிணைந்த வேலைகளிலும் ஈடுபடுவோரது ஆடல்கள்.

(4) கிராமிய கைவினையாளர்களின் இறைநம்பிக்கையும், சடங்குகளும் சார்ந்த ஆடல்கள்.

(5) கிராமியப் பெண்களின் வாழ்க்கை நிலை சார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆடல்கள்.

(6) அடித்தள மக்களின் அறிகை முறைமையில் ஆழ்ந்து வேரூன்றிய காவியக் கதைகளையும், வீரர்களின் வாழ்க்கை மேம்பாடுகளையும் குறிக்கும் கதை சார்த்த ஆடல்கள்,

(7) அடித்தள மக்களின் முழவு, பேரிகை, சங்கு, சக்கரம், தண்டு, முறம் முதலிய கருவிகளை ஏந்தி ஆடும் ஆடல்கள்

தீவிர சமூகபொருளாதார சுரண்டல்களுக்கு உள்ளாகும் மக்களிடத்து பன்முகமாகிய சிந்தனைச் கோலங்களும் அசைவுக் கோலங்களும் தோன்றுதல் தவிர்க்க முடியாததாகும்.

# அல்பேனியா

அல்பேனியா அந்நிய ஆதிக்கத்திலிருந்து 1944 ம் ஆண்டு விடுதலை பெற்றது. 1945 ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கம்யூனிஸ்ட்கட்சியினர் பெரும்பான்மையாக வெற்றியீட்டினர். ஆரம்பத்தில் ரஷ்யாவுடனும், பின்பு சீனாவுடனும், நெருங்கிய உறவுகளை வைத்திருந்தது.

1970ல் உருவாக்கப்பட் புதிய அரசியல் சட்டப்படி அல்பேனியா என்னும் பெயர் உருவாக்கப்பட்டது. 1942ல் கம்யூனிஸ்ட் கட்சி அல்லாத கட்சியினர் அரசாங்கம் அமைத்தனர். அத்துடன் ஐரோப்பாவின் முதலாவது இஸ்லாமியநாடாக மாறியது.

தென்கிழக்கு ஐரோப்பிய நாடான அல்பேனியா, அட்ரியாட்டிக்கடலில் மிக நீண்ட கடற்கரையைக் கொண்டது. இதற்கு வடக்கேயும், கிழக்கேயும் யூகோஸ்லாவியாவும், தெற்கே கிரீசும் இதன் எல்லைகளாகும்.

தலைநகர் - திரானா

பரப்பளவு - 28,748 சதுர கிலோ மீற்றர்

மக்கள்தொகை - 34இலட்சம்

மொழி - அல்பேனியன், கிரீக்

கல்வியறிவு - 75%

சமயம் - இஸ்லாம், கிறீஸ்தவம்

நாணயம் - லெக்

தனிநபர் வருமானம் - 1300 டொலர்

பொருளாதராம் - கோதுமை முக்கிய உற்பத்திப் பொருளாகும். இதனுடன் மற்றும் புகையிலை, இனிப்புக்கிழங்கு, பருத்தி என்பனவும், கால்நடை வளர்ப்பும் உண்டு. நிலக்கரியுடன்எண்ணைவளமும்உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் நினைவாக...

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் நிர்வாகசபை உறுப்பினரும், பரந்தன் தேசிய கூட்டுறவுச் சபையின் மாவட்டக் குழுத் தலைவரும், முதுபெரும் கூட்டுறவாளருமான அமரர் பண்டிதர் க. யோ. ஆசிநாதன் அவர்கள் 30. 04. 99ல் கொழும்பில் அமரரானதை முன்னிட்டு அவரது நினைவாக 1979ம் ஆண்டு வைகாசி மாத ''ஐக்கிய தீபம்'' பத்திரிகையில் அவரெழுதிய 'கூட்டுறவு ஒலி' என்னும் தலைப்பிலான கவிதை 20 வருடங்களின்பின் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

## கூட்டுறவு ஒலி

( எடுப்பு )

அர்த்தமுள்ள கூட்டுறவு என்ன
சொல்லுது - அது
அனைவரையும் ஒருங்கிணைந்து
உழைக்கச் சொல்லுது......

( தொடுப்பு )

தேவையுள்ள துறைகளிலே
மக்களுக்காக - அது
சேவை மூலம் பயன்பெறவே ஆர்வம்
நதததது
கூட்டுறவால் நாட்டுயர்வு ஆகும்
உண்மையே
வீட்டுயர்வும் மேட்டிமையும் மேவும்
வன்மையே......
( அர்த்த )

( முடிப்பு )

வேறுபட்ட அரசமத இன வெறிக்கு
அப்பாற்பட்டது
வீறு கொண்டசெயல்புரிய விளக்கந்
தந்தது
கூறு பசி பிணி நலிவுக்குறைகள்
தவிர்ப்பது
மாறுபடாக் கொள்கைகளின்
மாண்பை வளர்ப்பது......
( அர்த்த )

எல்லோர்க்கும் எல்லவரும்
ஏற்றவராய் ஒத்துழைக்க
நல்லவழி உருத்தளிக்கும் வாய்ப்பு
மிகு நல்லியக்கம்
கல்வி வளம் பண்பு சுய ஆட்சிதரும்
வல்லியக்கம்
சொல் செயலில் தூய்மையுள
கூட்டுறவை நாட ஏன் தயக்கம்?
( அர்த்த )

பண்டிதர் க. யோ. ஆசிநாதன்

## உங்களுக்குத் தெரியுமா?

1) இரண்டாம்படிக் கூட்டுறவுச் சங்கமொன்றின் பதிவு கோரும் விண்ணப்பத்தில் ஒப்பமிட வேண்டிய உறுப்பினர்களின் அதி குறைந்த எண்ணிக்கை யாது?

☆ மூன்று

2) கூட்டுறவுச்சங்கமொன்றின் முகாமைக் குழுவில் 18க்கும் 35 வயதிற்குப் இடைப்பட்ட வயதினை உடையவர்கள் எத்தனை பேர் அடங்குவர்? ☆ இருவர்

3) பதிவாளர். அல்லது அதிகாரம் பெற்றவரால் அழைக்கப்படும் பொதுக்கூட்டத்திற்கான நிறைவெண் யாது? ☆ மூன்று

4) 1992ம் ஆண்டின் 11ம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படக்கூடிய சங்கங்கள் எவை?

☆ 1. தனிநபர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட சங்கங்கள்.

2. சங்கங்களை அங்கத்தவர்களாகக் கொண்ட சங்கங்கள்.

5) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களின்படி சிறு தண்டனை வழங்கப்படக்கூடிய குற்றங்கள் எவை?

☆ 1. போதிய காரணமின்றி வேலைக்கு சமூகமளிக்காமை

2. போதிய காரணமின்றி வேலைக்குப் பிந்தி வருதல்.

3 வேலையில் அசமந்தமும், புறக்கணிப்பும்.

4 தனது வேலை சம்பந்தமாக கொடுக்கப்பட்ட சட்ட ரீதியான கட்டளையை நிறைவேற்ற பணியாளர் வேண்டுமென்றே தவறுதல்.

5 வியாபார நடவடிக்கைகளுக்காக பணிகொள்வோரின் வளவிற்குள்வரும் பொழுது மக்களிடம் பண்பின்றி நடத்தல்.

6. பொய்ச் சுகவீனம் காட்டுதல்.

7 தனது பணிகொள்வோரின் வளவினுள், பொறுப்பாக உள்ளவரின் முன்கூட்டிய அனுமதியின்றித் தனது வேலைக்குச் சம்மந்தமில்லாத கைநோட்டீஸ்கள், துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் என்பனவற்றை வழங்கலும் காட்சிப்படுத்தலும்.

8 பணிகொள்வோரின் வளவினைத் துப்பரவாக பேணுதல் தொடர்பாகக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறுதல்.

9. பணி கொள்வோரினால் வளவினுள் புகைத்தல் தடைசெய்யப்பட்ட இடத்தில் புகைபிடித்தல்.

6) ஒரு பணியாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது?

☆ சங்க முகாமைக் குழுவிடம்

7) இலங்கையில் முதன் முதலாக எப்போது கூட்டுறவுச் சட்டம் கொண்டுவரப்பட்டது?

☆ 1911ம் ஆண்டு

## அறிவுச் சுடர்

8) கூட்டுறவுச்சங்கம் ஒன்றை பதிவு செய்ய பதிவாளர் மறுத்தால் யாருக்கு மேன்முறையீடு செய்யலாம்?

☆ கூட்டுறவுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு.

9) கூட்டுறவுச் சங்கங்களுக்கான விதி யாரால் ஆக்கப்படுகிறது?

☆ கூட்டுறவுத்துறை அமைச்சரினால்

10) கூட்டுறவுச்சங்கங்களின் துணை விதியை ஆக்குவது யார்?

☆ அந்தந்த சங்கங்களின் அங்கத்தவர்களே

11) ஆசியாவில் கூட்டுறவு மாநாடு எங்கு எப்போது நடைபெற்றது?

☆ கொழும்பில் 1944 ம் ஆண்டு நடைபெற்றது,

12) கூட்டுறவு இயக்கநாடு என்று அழைக்கப்படும் நாடு எது?

☆ ஐஸ்லாந்து



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Registered as a News paper at the G. P. O
SriLanka Under No K. J. V. 59/87 ஐக்கியதீபம் வைகாசி - 1999

## கூட்டுறவுப்பணியாளர்தராதரப்பத்திரசாதாரண
# பிரிவு பரீட்சை முடிவுகள்

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் 1998ம் ஆண்டு கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண தரப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்று கூட்டுறவுக் கல்லூரி வடகிழக்கினால், (திருகோணமலை) நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் 13 பயிற்சியாளார்கள் சித்தியடைந்துள்ளனர். 10 பயிற்சியாளர்கள் நூன சித்தி அடைந் துள்ளனர்

சித்தியடைந்த பயிற்சி யாளர்களில் இருவர் இரண்டாம் பிரிவிலும், பதினொரு பேர் மூன்றாம் பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

2ம் பிரிவில் சித்தியடைந்தோர்- செல்விகள், ஜெ. ஸ். இராஜவதனி, ப. கௌரி.

3ம் பிரிவில் சித்தி அடைந்தோர் செல்விகள், க. கீதா, ந சிறீஸ்வரி காந்திசா, து. தயாரதி, வீ. திரிபுர சுந்தரி, மோ. பிறேமசுந்தரி, சோ மீனாம்பிகை, திருமதி ப. லதா திருவாளர்கள், து. சண்முகநாதன், இ. தயாபரன், மூ. பசோதரன், ஜே. யோன் கியூபேட்.

## கூட்டுறவுஇயக்கத்தில்..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வகுப்பர். உதாரணமாக ஓர் ஜனநாயக நாட்டினை எடுத்துக் கொண்டால் அங்கு இந்த இரட்டைத் தலைமையினைக் காணமுடியும் நாட்டின் பிரதம மந்திரியாகத் தெரிவுசெய்யப்படுபவர் ஓர் பெயரளவிலான தலைவராக இருப்பர். அதே நேரம் நாட்டின் நிர்வாக அலுவல்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் அமைச்சரவையிடம் உண்மைத் தலைமைத்துவம் காணப்படும். இதே போலவே கூட்டுறவு அமைப்பிலும் இந்த இரட்டைத் தலைமை உளளது. கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஓர் பெயரளவிலான தலைவராகவுள்ள போது சங்கத்தின் நிர்வாக அலுவல்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கொண்ட நிர்வாகசபையிடம உண்மைத் தலைமைத்துவம் இருக்கும். ஜனநாயக நாட்டில் அமைச்சரவையிடம் கூட்டுப் பொறுப்பு இருப்பது போல கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபையிடம் கூட்டுப்பொறுப்பு இருக்கிறது. எனவே கூட்டுறவு சங்க நிர்வாக சபை அங்கத்தவர்கள் ஒற்றுமையாகவும் திறமையாகவும் செயற்பட்டால் தான் கூட்டுறவுச் சங்கம் தனது இலக்கினை இலகுவில் எய்த முடியும்.

# வெள்ளி விழா

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடனுதவிச் சங்கத்தின் 25வது ஆண்டு வெள்ளிவிழா 19 06-1999 சனிக்கிழமை சங்கத் தலைவர் திரு. தி. சிறிகந்தமூர்த்தி தலைமையில் சங்கானை கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இறுதிப் பரீட்சை

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண தர இறுதிப் பரீட்சை யூன் மாதம் 23ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

## கூட்டுறவுச் சிந்தனைகள்

☆ முழு மனதுடன் ஈடுபட்டுகூட்டுறவில் நேர்மை எண்ணத்துடன் செய்யும் எந்த முயற்சியும் வீண்போகாது.

☆ பதற்றமில்லாமல் சாந்தமான சூழ்நிலையில் பணிபுரியும் கூட்டுறவாளர்களால்தான் எடுத்தகாரியத்தை வெற்றியுடன் செய்து முடிக்கமுடியும்.

☆ வெறும் பேச்சைவிட செயல்தான் கூட்டுறவில் சிறந்தபயனை அளிக்கும்.

☆ கூட்டுறவில் எவரும் ஆத்திரமோ, பதற்றமோ, அடைதல் கூடாது. விஷேச சிந்தனைகொண்டு செயல்புரிதல் வேண்டும். அதுவே அவரின் வெற்றிக்கு வழியாகும்.

☆ கூட்டுறவில் ஒருவர் அடையும் பெருமையானது அவருக்குப்பிறர் அளிக்கும் ஆதரவைப் பொறுத்துத்தான் அமைந்துள்ளது என்பதை இயக்கத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் நினைவு கொள்ள வேண்டும்

☆ உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி உறுதியுடன் கூட்டுறவில் செயலாற்ற உள்ளத் தூய்மையெனும் உயரியபண்பாட்டை ஒவ்வொருவரும் உடைத்தாயிருத்தல்வேண்டும்.

## உழைப்பவன் உயர் தினம்!

உதயன் உதிக்குமுன்
உழைக்கச் சென்றவர்கள்
உறைவிடம் திரும்பிய நேரம் -
உதயன் மறைந்தபின்...! அந்தோ...!
உழைக்கும் நேரமோ அதிகம் - ஆனால்
உழைப்பின் ஊதியமோ சொற்பம்!
உழைப்பைப் பெற்றவர்கள்
உழைப்பவனின் உரிமைகளை
உதாசீனம் செய்ததனால்.
உரிமைகள் வென்றிடவே
உழைப்பவர்கள் ஒன்றுபட்டார்!
உழைக்கும் நேரம் எட்டுமணியென்னும்
உத்தமமாம் கோரிக்கையில்
உறுதியுடன் இணைந்த
உயர்ந்த நெஞ்சங்களால்
உரிமைப் போர்வெடித்தது - ஆ..!
உழைப்பவன் மேல் வன்முறை!
உதிரம் சிந்தியது - அந்த
உன்னத தியாகத்தால்
உழைக்கின்ற வர்க்கம்
உரிமைகள் வென்றெடுத்த "மே" நாளை -
உழைப்பவனின் உயர்வை எண்ணி
உணர்ச்சியுடன்கொண்டாடிடுவோம்.

நாயன்மார்கட்டு - ப. மகேந்திரதாசன்

## மே மாதத்தில் வரும்முக்கிய தினங்கள்

☆ 01 உலக தொழிலாளர் தினம்
☆ 03 உலக சுதந்திர பத்திரிகையாளர் தினம்
☆ 05 உலக அன்னையர் தினம்
☆ 06 உலக செஞ்சிலுவை சங்க தினம்
☆ 15 உலக குடும்பதினம்
☆ 17 உலக தகவல் தினம்
☆ 18 உலக நூதன சாலை தினம்

☆ ☆ ☆

## முக்கிய ஆண்டுகள்

1979 - சர்வதேசகுழந்தைகள் ஆண்டு
1986 - சர்வதேச சமாதான ஆண்டு
1987 - உலக குடியிருப்பு ஆண்டு
1990 - உலக கல்வி ஆண்டு
1993 - உலக ஆதிவாசிகள் ஆண்டு
1994 - உலக குடும்ப ஆண்டு
1991 - 2000 - உலக பெண்கள் ஆண்டு

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 14 மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மா. கூ. சபையினரால் 1999ம் ஆண்டு வைகாசி மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org